**நாணயச் சபை**

**இலங்கை மத்திய வங்கி**

**2016 ஒத்தோபர் நுண்பாகநிதிச் சட்டப் பணிப்புரைகள் 2016 இலக்கம் 01**

## குறைந்தபட்ச மைய மூலதனம்

2016ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நுண்நிதியளிப்புச் சட்டத்தின் 11ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்பட்டது.

1. குறைந்தபட்ச மைய மூலதனம்

1.1 **2018 சனவரி 15ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ உரிமத்திற்காக விண்ணப்பிக்கின்ற கம்பனிகள்**

ஒவ்வொரு உரிமம் பெற்ற நுண்பாக நிதிக் கம்பனியும் எல்லா நேரங்களிலும் மைய மூலதனத்தினை ரூபா நூறு மில்லியனுக்குக் குறையாத (ரூ.100,000,000) மட்டமொன்றிலும் 2019 சனவரி 01ஆம் நாளிலிருந்து அவை மைய மூலதனமாக ரூபா நூற்றியம்பது மில்லியனுக்குக் (ரூ.150,000,000) குறையாத தொகையொன்றினையும் பேணுதல் வேண்டும்.

1.2 **2018 சனவரி 15ஆம் திகதிக்குப் பின்னர் உரிமத்திற்காக விண்ணப்பிக்கும் கம்பனிகள்**

மைய மூலதனத்தினை ரூபா நூற்றியம்பது மில்லியனுக்கு (ரூ.150,000,000) குறையாத மட்டமொன்றில் பேணுதல் வேண்டும்.

2. இணங்கிச் செல்லாதவிடத்து மேற்கொள்ளப்படும் ஒழுங்குமுறைப்படுத்தல் வழிமுறைகள்

2.1 உரிமம் பெற்ற நுண்பாக நிதிக் கம்பனிகள் இப்பணிப்புரைகளுக்கு இணங்கத் தவறுமிடத்து:

அ) வைப்புப் பொறுப்புக்களினதும் படுகடன்களினதும் மொத்தத் தொகையானது இணங்கிச் செல்லாமை எந்த மாதத்தில் உறுதிப்படுத்தப்பட்டதோ அம்மாதத்தின் இறுதியிலுள்ள மட்டத்தில் மட்டுப்படுத்தப்படும், அத்துடன்

ஆ) உரிமம் பெற்ற நுண்பாக நிதிக் கம்பனிகள், குறைந்தபட்ச மூலதனத் தேவைப்பாடுகள் இணங்குவிக்கப்பட்டு நுண்பாக நிதி நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களப் பணிப்பாளர் திருப்தியடைந்து அதனை உறுதிப்படுத்தும் வரை பங்கிலாபங்கள் எதனையும் செலுத்தக்கூடாது.

3. கம்பனியின் மைய மூலதனம்

3.1 கம்பனியின் மைய மூலதனம் பின்வருவனவற்றை உள்ளடக்குதல் வேண்டும்:

அ) வழங்கப்பட்டு முழுமையாக செலுத்தப்பட்ட சாதாரண பங்குகள் எது எவ்வாறெனினும், இச்சட்டத்தின் கீழ் உரிமத்திற்காக கம்பனியொன்று விண்ணப்பிப்பது தொடர்பில் மைய மூலதனத்தினைக் கணிக்கும் பொழுது வழங்கப்பட்ட சாதாரண பங்குகள் அவை காசுக்காக வழங்கப்பட்டால் மட்டுமே செலுத்தப்பட்டனவாகக் கருதப்படும்.

ஆ) வழங்கப்பட்டு முழுமையாகச் செலுத்தப்பட்ட ஒன்றுசேராத மீட்கப்பட முடியாத முன்னுரிமைப் பங்குகள். எது எவ்வாறெனினும், இச்சட்டத்தின் கீழ் உரிமத்திற்காக கம்பனியொன்று விண்ணப்பிப்பது தொடர்பில் மைய மூலதனத்தினை தீர்மானிப்பதில் வழங்கப்பட்ட ஒன்று திரளாத மீட்கப்படாத முன்னுரிமப் பங்குகள் அவை காசுக்காக வழங்கப்பட்டிருந்தால் மட்டும் செலுத்தப்பட்டனவாகக் கருதப்படும்.

இ) நியதிச் சட்ட ஒதுக்குகள்

ஈ) பொது ஒதுக்குகள்

உ) இறுதியாகக் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குக் கூற்றில் காட்டப்பட்டவாறு பிடித்துவைக்கப்பட்ட இலாபம் அல்லது இழப்பு

ஊ) வெளியிடப்படாத நடைமுறையாண்டு இலாபம்/ (இழப்பு)

இந்திரஜித் குமாரசுவாமி
**நாணயச் சபையின் தலைவர்**
**இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர்**